# அல்லாஹ்வின் அழகிய
# 99 திருநாமங்களை
# பொருளுணர்ந்து மனனமிடுவோம்

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر


## தொகுப்பு:
## அல்கோபர் அழைப்பகம்
## தமிழ் பிரிவு

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்

وَلِلَّهِ الْأَسْمَاءُ الْحُسْنَىٰ فَادْعُوهُ بِهَا

وَذَرُوا الَّذِينَ يُلْحِدُونَ فِي أَسْمَائِهِ ۚ سَيُجْزَوْنَ مَا كَانُوا يَعْمَلُونَ

அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன;
அவற்றைக் கொண்டே நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள்,
அவனுடைய திருநாமங்களை தவறாக பயன்படுத்துவோர்களை
(புறக்கணித்து) விட்டு விடுங்கள். அவர்களுடைய
செயல்களுக்காக அவர்கள் (தக்க) கூலி கொடுக்கப்படுவார்கள்.

**திருக்குர்ஆன் 7:180**

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ

" إِنَّ لِلَّهِ تِسْعَةً وَتِسْعِينَ اسْمًا مِائَةً إِلاَّ وَاحِدًا، مَنْ أَحْصَاهَا دَخَلَ الْجَنَّةَ "

"நிச்சயமாக அல்லாஹ்விற்கு தொண்ணூற்று ஒன்பது, நூற்றுக்கு ஒன்று குறைவான பெயர்கள் உள்ளன. அவற்றை (நம்பிக்கை கொண்டு) மனனமிட்டவர் சொர்க்கத்தில் நுழைவார்" என அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்

அறிவிப்பாளர்: அபூஹுரைரா( رَضِيَ اللَّهُ عَنْهُ ) அவர்கள். புகாரி 7392

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்

| | | |
|---|---|---|
| الله | அல்லாஹ்<br>வணங்கப்படக்கூடியவன் | 1 |
| الإله | அல்இலாஹ்<br>வணங்கப்படக்கூடியவன் | 2 |
| الحي | அல்ஹய்யு<br>என்றும் உயிருடன் இருப்பவன் | 3 |
| القيوم | அல்கய்யூம்<br>என்றும் நிலைத்திருப்பவன் | 4 |

اللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَ الْحَىُّ الْقَيُّوْمُ ۚ

அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்:

உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் என்றும் உயிருடன் இருப்பவன், நிலைத்திருப்பவன்.

திருக்குர்ஆன் 2 : 255

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்கள்

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

5 அர்ரப்பு — அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிப்பவன் — الرَّبُّ

6 அர்ரஹ்மான் — அளவற்ற அருளாளன் — الرَّحْمَنُ

7 அர்ரஹீம் — நிகரற்ற அன்புடையவன் — الرَّحِيمُ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَۙ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையவன்.

قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم : فَأَمَّا الرُّكُوعُ فَعَظِّمُوا فِيهِ الرَّبَّ عَزَّ وَجَلَّ

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ருகூவைப் பொருத்தளவில் அதனில் கண்ணியமிக்க இரட்சகனை மேன்மைப்படுத்துங்கள்.

திருக்குர்ஆன் 1:2,3 & அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 824

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

| | | |
|---|---|---|
| المَلِكُ | **அல்மலிக்**<br>ஆட்சியாளன் | 8 |
| القُدُّوسُ | **அல்குத்தூஸ்**<br>பரிசுத்தமானவன் | 9 |
| السَّلامُ | **அஸ்ஸலாம்**<br>சாந்தியளிப்பவன் | 10 |
| المُؤْمِنُ | **அல்முஃமின்**<br>தூதர்களுக்கு அற்புதங்களை வழங்கி உண்மைப்படுத்திப் பாதுகாப்பவன் | 11 |
| المُهَيْمِنُ | **அல்முஹைமின்**<br>கண்காணிப்பவன் | 12 |
| العَزِيزُ | **அல்அஸீஸ்**<br>யாவற்றையும் மிகைத்தவன் | 13 |
| الجَبَّارُ | **அல்ஜப்பார்**<br>அடக்கியாளுபவன் | 14 |
| المُتَكَبِّرُ | **அல்முதகப்பிர்**<br>பெருமைக்குரியவன் | 15 |
| الخَالِقُ | **அல்ஹாலிக்**<br>படைப்பவன் | 16 |
| البَارِئُ | **அல்பாரி**<br>தோற்றுவிப்பவன் | 17 |
| المُصَوِّرُ | **அல்முஸவ்விர்**<br>உருவமைப்பவன் | 18 |
| الحَكِيمُ | **அல்ஹகீம்**<br>ஞானமிக்கவன் | 19 |

**திருக்குர்ஆன் 59:23,24**

هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

هُوَ اللّٰهُ الَّذِىۡ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۚ اَلۡمَلِكُ الۡقُدُّوۡسُ السَّلٰمُ الۡمُؤۡمِنُ الۡمُهَيۡمِنُ
الۡعَزِيۡزُ الۡجَـبَّارُ الۡمُتَكَبِّرُ ؕ سُبۡحٰنَ اللّٰهِ عَمَّا يُشۡرِكُوۡنَ ﴿۲۳﴾
هُوَ اللّٰهُ الۡخَـالِـقُ الۡبَارِئُ الۡمُصَوِّرُ لَـهُ الۡاَسۡمَآءُ الۡحُسۡنٰى ؕ يُسَبِّحُ لَهٗ مَا
فِى السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ ۚ وَهُوَ الۡعَزِيۡزُ الۡحَكِيۡمُ ﴿۲۴﴾

அவனே அல்லாஹ், வணக்கத்திற்குரிய நாயன் அவனைத் தவிர, வேறு யாரும் இல்லை; அவனே பேரரசன்; மிகப்பரிசுத்தமானவன்; சாந்தியளிப்பவன்; தஞ்சமளிப்பவன்; பாதுகாப்பவன்; (யாவரையும்) மிகைப்பவன்; அடக்கியாள்பவன்; பெருமைக்கு உரித்தானவன் – அவர்கள் இணைவைப்பவற்றை எல்லாம் விட்டு அல்லாஹ் மிகத் தூய்மையானவன்.

அவன்தான் அல்லாஹ்; படைப்பவன்; ஒழுங்குபடுத்தி உண்டாக்குபவன்; உருவமளிப்பவன் – அவனுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன; வானங்களிலும், பூமியிலும் உள்ளவையாவும் அவனையே தஸ்பீஹு (செய்து துதி) செய்கின்றன – அவனே (யாவரையும்) மிகைத்தவன் ஞானம் மிக்கவன்.

**திருக்குர்ஆன் 59:23,24**

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

| | | |
|---|---|---|
| الأَوَّلُ | அல்அவ்வல்<br>முதலாமவன் | 20 |
| الآخِرُ | அல்ஆகிர்<br>இறுதியானவன் | 21 |
| الظَّاهِرُ | அல்ழாஹிர்<br>மேலானவன் | 22 |
| البَاطِنُ | அல்பாதின்<br>அந்தரங்கமானவன் | 23 |
| العَلِيمُ | அல்அலீம்<br>யாவற்றையும் நன்கறிந்தவன் | 24 |

هُوَ الْأَوَّلُ وَالْآخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ ۖ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

முதலாமவனும், இறுதியானவனும், மேலானவனும்,
அந்தரங்கமானவனும் அவனே!
அவன் யாவற்றையும் நன்கறிந்தவன்.

திருக்குர்ஆன் 57:3

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

| | | |
|---|---|---|
| 25 | அல்க(غ)பூ(ف)ர்<br>மிக்க மன்னிப்பவன் | الغَفُورُ |
| 26 | அல்வதூத்<br>மிக்க நேசிப்பவன் | الوَدُودُ |
| 27 | அல்மஜீத்<br>மேன்மைமிக்கவன் | المَجِيدُ |

وَهُوَ الْغَفُورُ الْوَدُودُ ﴿١٤﴾ ذُو الْعَرْشِ الْمَجِيدُ ﴿١٥﴾

அவன் மிக்க மன்னிப்பவன் மிக்க நேசிப்பவன். அவன் அர்ஷையுடையவன் மேன்மைமிக்கவன்.

திருக்குர்ஆன் 85:14,15

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

| | | |
|---|---|---|
| الرَّزَّاقُ | அர்ரஸ்(ز)ஸாக்<br>உணவளிப்பவன் | 28 |
| الْقَوِيُّ | அல்கவிய்யு<br>பலமிக்கவன் | 29 |
| الْمَتِينُ | அல்மதீ(ت)ன்<br>உறுதியானவன் | 30 |

اِنَّ اللّٰهَ هُوَ الرَّزَّاقُ ذُو الْقُوَّةِ الْمَتِيْنُ ﴿٥٨﴾

நிச்சயமாக அல்லாஹ்தான் உணவு அளித்துக் கொண்டிருப்பவன்; பலம் மிக்கவன்; உறுதியானவன்.

اَللّٰهُ لَطِيْفٌ بِعِبَادِهٖ يَرْزُقُ مَنْ يَّشَآءُ وَهُوَ الْقَوِىُّ الْعَزِيْزُ ﴿١٩﴾

அல்லாஹ் தன் அடியார்கள் பால் அன்பு மிக்கவனாக இருக்கிறான்,
தான் நாடியவர்களுக்கு உணவளிக்கிறான்,
அவனே வலிமை மிக்கவன், மிகைத்தவன்.

திருக்குர்ஆன் 51:58 & 42:19

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

| | | |
|---|---|---|
| اَلْخَيْرُ | அல்கய்ர்<br>சிறந்தவன் | 31 |
| اَلْحَافِظُ | அல்ஹாபிழ்<br>பாதுகாவலன் | 32 |
| الحَفِيظُ | அல்ஹபீழ்<br>யாவற்றையும் கண்காணிப்பவன் | 33 |

فَاللّٰهُ خَيْرٌ حٰفِظًا‌ ۖ وَّهُوَ اَرْحَمُ الرّٰحِمِيْنَ ﴿٦٤﴾

பாதுகாப்பவர்களில் அல்லாஹ்வே
மிகவும் மேலானவன். கிருபையாளர்களில்
அவனே எல்லோரையும் விட மிக்க கிருபையாளன் ஆவான்.

اِنَّ رَبِّىْ عَلٰى كُلِّ شَىْءٍ حَفِيْظٌ ﴿٥٧﴾

நிச்சயமாக என் இறைவன் யாவற்றையும் பாதுகாப்பவனாக இருக்கின்றான்

திருக்குர்ஆன் 12:64 & 11:57

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

| | | | |
|---|---|---|---|
| 34 | அல்ஆலிம் | நன்கறிந்தவன் | الْعَالِمُ |
| 35 | அல்கபீர் | மிகப் பெரியவன் | الْكَبِيرُ |
| 36 | அல்முதஆல் | மிக உயர்ந்தவன் | الْمُتَعَالُ |

عَٰلِمُ ٱلْغَيْبِ وَٱلشَّهَٰدَةِ ٱلْكَبِيرُ ٱلْمُتَعَالِ ٩

இரகசியத்தையும், பரகசியத்தையும் அவன் நன்கறிந்தவன், அவன் மிகப்பெரியவன், மிகவும் உயர்ந்தவன்.

திருக்குர்ஆன் 13:9

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

| | | |
|---|---|---|
| 37 | அல்மாலிக்<br>தீர்ப்பு நாளின் அதிபதி | اَلْمَالِكُ |
| 38 | அல்மலீக்<br>அரசன் | اَلْمَلِيْكُ |
| 39 | அல்முக்ததிர்<br>வலிமைமிக்கவன் | اَلْمُقْتَدِرُ |

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ٤

(அவனே நியாயத்) தீர்ப்பு நாளின் அதிபதி(யும் ஆவான்).

فِيْ مَقْعَدِ صِدْقٍ عِنْدَ مَلِيْكٍ مُّقْتَدِرٍ ٥٥

உண்மையான இருக்கையில் சர்வ வல்லமையுடைய அரசனின் அண்மையில் இருப்பார்கள்.

திருக்குர்ஆன் 1:4 & 54:55

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

اَلْأَحَدُ — அல்அஹத் — ஒருவன் — 40

اَلصَّمَدُ — அஸ்ஸமத் — எவ்வித தேவையுமற்றவன் — 41

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۝١ اَللّٰهُ الصَّمَدُ ۝٢

(நபியே!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே.
அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன்.

عَنْ أَبِي هُرَيْرَةَ ـ رضى الله عنه ـ عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ : قال الله عزوجل : "..... وَأَنَا الأَحَدُ الصَّمَدُ لَمْ أَلِدْ وَلَمْ أُولَدْ وَلَمْ يَكُنْ لِي كُفُأً أَحَدٌ" .

அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்: '...மேலும், நான் ஒருவன், எவ்விதத் தேவையுமற்றவன், நான் பெறவுமில்லை பெறப்படவுமில்லை இன்னும், எனக்கு நிகராக எவருமில்லை.' என்று இறைத்தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவித்தார்கள்.

திருக்குர்ஆன் 112:1,2 & புகாரி 4974

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

| | | |
|---|---|---|
| اَلْوَاحِدُ | அல்வாஹித்<br>தனித்தவன் | 42 |
| اَلْقَهَّارُ | அல்கஹ்ஹார்<br>அடக்கியாளுபவன் | 43 |

قُلِ اللّٰهُ خَالِقُ كُلِّ شَىْءٍ وَّهُوَ الْوَاحِدُ الْقَهَّارُ

(நபியே! நீர்) கூறும்: "அல்லாஹ்வே எல்லாப் பொருட்களையும் படைக்கிறவன். அவன் ஒருவனே (அனைத்தையும்) அடக்கி ஆள்பவன்" என்று.

திருக்குர்ஆன் 13:16

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

| | | |
|---|---|---|
| اَلْوَلِيُّ | அல்வலிய்யு<br>பாதுகாவலன் | 44 |
| اَلْحَمِيْدُ | அல்ஹமீத்<br>புகழுக்குரியவன் | 45 |

وَهُوَ الْوَلِيُّ الْحَمِيْدُ

இன்னும் அவனே பாதுகாவலன்,
புகழுக்குரியவன்.

திருக்குர்ஆன் 42:28

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

46 அல்மவ்லா اَلْمَوْلَى
பாதுகாவலனில் சிறந்தவன்

47 அந்நஸீர் اَلنَّصِيْرُ
உதவி செய்பவனில் சிறந்தவன்

فَنِعْمَ الْمَوْلٰى وَنِعْمَ النَّصِيْرُ

அவனே பாதுகாவலனில் சிறந்தவன்,
உதவி செய்பவனில் சிறந்தவன்

திருக்குர்ஆன் 22:78

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

| | | |
|---|---|---|
| 48 | அர்ரகீப்<br>கண்காணிப்பவன் | اَلرَّقِيْبُ |
| 49 | அஷ்ஷஹீத்<br>கண்காணிப்பவன் | اَلشَّهِيْدُ |

فَلَمَّا تَوَفَّيْتَنِىْ كُنْتَ اَنْتَ الرَّقِيْبَ
عَلَيْهِمْ وَاَنْتَ عَلٰى كُلِّ شَىْءٍ شَهِيْدٌ

நீ என்னைக் கைப்பற்றியதும், நீயே அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தாய். நீ தான் யாவற்றையும் கண்காணிப்பவனாக இருக்கின்றாய்.

திருக்குர்ஆன் 5:117

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

| | | |
|---|---|---|
| اَلسَّمِيْعُ | அஸ்ஸமீஉ<br>செவியுறுபவன் | 50 |
| اَلْبَصِيْرُ | அல்பஸீர்<br>பார்ப்பவன் | 51 |

اِنَّهٗ هُوَ السَّمِيْعُ الْبَصِيْرُ

நிச்சயமாக அவன் யாவற்றையும் செவியுறுபவன், பார்ப்பவன்.

திருக்குர்ஆன் 40:56

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

اَلْحَقُّ
அல்ஹக்கு
உண்மையாளன்
52

اَلْمُبِيْنُ
அல்முபீன்
தெளிவுபடுத்தக் கூடியவன்
53

اَنَّ اللّٰهَ هُوَ الْحَقُّ الْمُبِيْنُ ﴿٢٥﴾

நிச்சயமாக அல்லாஹ்
தெளிவுபடுத்தக்கூடிய உண்மையாளன்
என்பதை அறிந்து கொள்வார்கள்.

திருக்குர்ஆன் 24:25

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

ٱللَّطِيفُ அல்லதீப் நுட்பமானவன் 54

ٱلْخَبِيرُ அல்ஹபீர் நன்கறிந்தவன் 55

أَلَا يَعْلَمُ مَنْ خَلَقَ وَهُوَ ٱللَّطِيفُ ٱلْخَبِيرُ ﴿١٤﴾

(அனைத்தையும்) படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுட்பமானவன். யாவற்றையும் நன்கறிந்தவன்.

திருக்குர்ஆன் 67:14

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

56 அல்கரீப்
அருகிலுள்ளவன்
ٱلْقَرِيبُ

57 அல்முஜீப்
பதிலளிப்பவன்
ٱلْمُجِيبُ

إِنَّ رَبِّى قَرِيبٌ مُّجِيبٌ ٦١

நிச்சயமாக எனது இரட்சகன்
அருகிலுள்ளவனும் பதிலளிப்பவனுமாவான்
என்று (ஸாலிஹ்) கூறினார்.

திருக்குர்ஆன் 11:61

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

58

ٱلْكَرِيمُ

அல்கரீம்

கண்ணியமானவன்

59

ٱلْأَكْرَمُ

அல்அக்ரம்

மிக கண்ணியமானவன்

يَٰٓأَيُّهَا ٱلْإِنسَٰنُ مَا غَرَّكَ بِرَبِّكَ ٱلْكَرِيمِ ٦

மனிதனே! கண்ணியமான உன் இரட்சகன் விசயத்தில் உன்னை ஏமாற்றியது எது?

ٱقْرَأْ وَرَبُّكَ ٱلْأَكْرَمُ ٣

நீர் ஓதுவீராக! உமது இரட்சகன் மிக கண்ணியமானவன்.

திருக்குர்ஆன் 82:6, 96:3

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اَلْعَلِيُّ அல்அலிய்யு 60
மிக உயர்ந்தவன்

اَلْعَظِيمُ அல்அழீம் 61
மிக்க மகத்துவமானவன்

وَلَا يَـُٔودُهُۥ حِفْظُهُمَا وَهُوَ الْعَلِيُّ الْعَظِيمُ ﴿٢٥٥﴾

அவை இரண்டையும் பாதுகாப்பது அவனுக்கு சிரமமன்று. அவன் மிக உயர்ந்தவனும் மிக்க மகத்துவமானவனுமாவான்.

திருக்குர்ஆன் 2: 255

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

62 அல்ஹஸீப் போதுமானவன் اَلْحَسِيْبُ

63 அல்வகீல் பொறுப்பாளன் اَلْوَكِيْلُ

فَزَادَهُمْ اِيْمَانًا

وَّقَالُوْا حَسْبُنَا اللّٰهُ وَنِعْمَ الْوَكِيْلُ

அது அவர்களுக்கு நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்தியது.
இன்னும், அல்லாஹ்வே எமக்குப் போதுமானவன்.
அவனே பொறுப்பாளர்களில் சிறந்தவனாவான்

திருக்குர்ஆன் 3:173

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اَلشَّكُورُ அஷ்ஷகூர் 64
நன்றி செலுத்துபவன்

اَلْحَلِيمُ அல்ஹலீம் 65
சகிப்புத்தன்மை உடையவன்

وَاللَّهُ شَكُورٌ حَلِيمٌ

அல்லாஹ் நன்றி செலுத்துபவன்

சகிப்புத்தன்மை உடையவன்.

திருக்குர்ஆன் 64:17

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

66 அல்பர் — اَلْبَرُّ
பேருபகாரம் செய்பவன்

67 அஷ்ஷாகிர் — اَلشَّاكِرُ
நன்றி உடையவன்

هُوَ الْبَرُّ الرَّحِيمُ ﴿٢٨﴾

நிச்சயமாக அவன் பேருபகாரம் செய்பவனும், நிகரற்ற அன்புடையவனுமாவான்.

وَكَانَ اللّٰهُ شَاكِرًا عَلِيمًا ﴿١٤٧﴾

அல்லாஹ் நன்றி உடையவனாகவும், நன்கு அறிந்தவனாகவும் இருக்கின்றான்.

திருக்குர்ஆன் 52:28, 4:147

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

68 அல்வஹ்ஹாப் பெரும் கொடையாளன் اَلْوَهَّابُ

69 அல்காஹிர் அடக்கி ஆள்பவன் اَلْقَاهِرُ

أَمْ عِندَهُمْ خَزَآئِنُ رَحْمَةِ رَبِّكَ ٱلْعَزِيزِ ٱلْوَهَّابِ ﴿٩﴾

பெரும்கொடையாளனும், அனைத்தையும் மிகைத்தவனுமான உமது இரட்சகனின் அருள் பொக்கிஷங்கள் அவர்களிடம் இருக்கின்றனவா?

وَهُوَ ٱلْقَاهِرُ فَوْقَ عِبَادِهِۦ ۚ وَهُوَ ٱلْحَكِيمُ ٱلْخَبِيرُ ﴿١٨﴾

அவனே தனது அடியார்களுக்கு மேலிருந்து அடக்கி ஆள்பவன்.

திருக்குர்ஆன் 38:9, 6:18

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

| | | | |
|---|---|---|---|
| 70 | அல்வஹ்ஹாப் | கொடையாளன் | اَلْغَفَّارُ |
| 71 | அல்காஹிர் | அடக்கி ஆள்பவன் | اَلتَّوَّابُ |

رَبُّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَيْنَهُمَا الْعَزِيْزُ الْغَفَّارُ ﴿٦٦﴾

அவன் வானங்கள், பூமி மற்றும் அவை இரண்டிற்கும் இடைப்பட்டவற்றின் இரட்சகனும், யாவற்றையும் மிகைத்தவனும், மிக்க மன்னிப்பவனுமாவான்.

فَتَلَقّٰۤى اٰدَمُ مِنْ رَّبِّهٖ كَلِمٰتٍ فَتَابَ عَلَيْهِ اِنَّهٗ هُوَ
التَّوَّابُ الرَّحِيْمُ ﴿٣٧﴾

பின்னர் ஆதம் தனது இரட்சகனிடமிருந்து சில வார்த்தைகளைப் பெற்று அதன் மூலம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அதனால் அவன் அவரை மன்னித்தான். நிச்சயமாக அவன் தான் மிக்க மன்னிப்பவனும், நிகரற்ற அன்புடையவனுமாவான்.

திருக்குர்ஆன் 38:66, 2:37

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

اَلْفَتَّاحُ — அல்பத்தாஹ் — சிறந்த தீர்ப்பாளன் — 72

اَلرَّءُوْفُ — அர்ரஊப் — கருணையாளன் — 73

وَهُوَ الْفَتَّاحُ الْعَلِيْمُ ﴿٢٦﴾

அவன் சிறந்த தீர்ப்பாளனும்
நன்கறிந்தவனுமாவான் என்று கூறுவீராக!

وَلَوْلَا فَضْلُ اللّٰهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهٗ
وَاَنَّ اللّٰهَ رَءُوْفٌ رَّحِيْمٌ ﴿٢٠﴾

அல்லாஹ்வின் அருளும், அவனது கருணையும் உங்களுக்கு இல்லையென்றிருந்தால் உங்களுக்குத் தண்டனை ஏற்பட்டிருக்கும். நிச்சயமாக அல்லாஹ் கருணையாளன் நிகரற்ற அன்புடையவன்.

திருக்குர்ஆன் 34:26, 24:20

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

| | | |
|---|---|---|
| 74 | அந்நூர்<br>பிரகாசமானவான் | اَلنُّوْرُ |
| 75 | அல்முகீத்<br>கண்காணிப்பவன் | اَلْمُقِيْتُ |

اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ﴿٣٥﴾

அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியின் பிரகாசமானவான்.

وَكَانَ اللّٰهُ عَلٰى كُلِّ شَىْءٍ مُّقِيْتًا ﴿٨٥﴾

அல்லாஹ் யாவற்றையும் கண்காணிப்பவனாக இருக்கின்றான்.

திருக்குர்ஆன் 24 : 35, 4 : 85

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

76 அல்வாரிஸு اَلْوَارِثُ
உரிமையாளன்

77 அல்அஃலா اَلْأَعْلَى
மிக உயர்வானவன்

وَنَحْنُ الْوٰرِثُوْنَ ﴿٢٣﴾

மேலும் நாமே எல்லாவற்றிற்கும் உரிமையாளர்களாவோம்.

سَبِّحِ اسْمَ رَبِّكَ الْاَعْلَى ﴿١﴾

(நபியே) மிக உயர்வான உமது இரட்சகனின் பெயரைத் துதிப்பீராக!

திருக்குர்ஆன் 15 : 23, 87: 1

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

اَلْمُحِيْطُ
அல்முஹீத்
சூழ்ந்தறிபவன்
78

اَلْعَلَّامُ
அல்அல்லாம்
மறைவானவற்றை மிக அறிந்தவன்
79

اَلَاۤ اِنَّهٗ بِكُلِّ شَىْءٍ مُّحِيْطٌ ﴿٥٤﴾

அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அவன் யாவற்றையும் சூழ்ந்தறிபவன்.

اَلَمْ يَعْلَمُوْۤا اَنَّ اللّٰهَ يَعْلَمُ سِرَّهُمْ
وَنَجْوٰىهُمْ وَاَنَّ اللّٰهَ عَلَّامُ الْغُيُوْبِ ﴿٧٨﴾

நிச்சயமாக அல்லாஹ் அவர்களது உள்ளத்து இரகசியத்தையும், அவர்களது இரகசியப் பேச்சையும் நன்கறிவான் என்பதையும், நிச்சயமாக அல்லாஹ் மறைவானவற்றை மிக அறிந்தவன் என்பதையும் அவர்கள் அறியவில்லையா?

திருக்குர்ஆன் 41:54, 9: 78

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

**80** அல்முஸ்தஆன் — اَلْمُسْتَعَانُ
உதவி தேடப்படக்கூடியவன்

**81** அல்ஹாதி — اَلْهَادِيْ
நேரான வழியின் பால் செலுத்தக்கூடியவன்

وَرَبُّنَا الرَّحْمٰنُ الْمُسْتَعَانُ عَلٰى مَا تَصِفُوْنَ ﴿١١٢﴾

மேலும் எங்கள் இரட்சகன் நீங்கள் வர்ணிப்பதற்கு மாற்றமாக உதவி தேடப்படக்கூடிய அர்ரஹ்மானாவான்.

وَاِنَّ اللّٰهَ لَهَادِ الَّذِيْنَ اٰمَنُوْۤا اِلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ﴿٥٤﴾

நிச்சயமாக அல்லாஹ் நம்பிக்கை கொண்டோரை நேரான வழியின் பால் செலுத்தக்கூடியவன்.

திருக்குர்ஆன் 21: 112, 22: 54

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

82 اَلنَّاصِرُ
அந்நாஸிர்
உதவி செய்பவன்

83 اَلْخَلَّاقُ
அல்ஹல்லாக்
அனைத்தையும் படைத்தவன்

بَلِ اللّٰهُ مَوْلٰىكُمْ وَهُوَ خَيْرُ النّٰصِرِيْنَ ﴿١٥٠﴾

மாறாக அல்லாஹ்வே உங்கள் பாதுகாவலன்.

அவனே உதவி செய்வோரில் மிகச் சிறந்தவனாவான்.

اِنَّ رَبَّكَ هُوَ الْخَلّٰقُ الْعَلِيْمُ ﴿٨٦﴾

நிச்சயமாக உமது இரட்சகனே அனைத்தையும் படைத்தவன் நன்கறிந்தவன்.

திருக்குர்ஆன் 3: 150, 15 : 86

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

84 அல் அஃபுவ்வு — பிழை பொறுப்பவன் — اَلْعَفُوُّ

85 அல்ஹாகிம் — தீர்ப்பளிப்பவன் — اَلْحَاكِمُ

فَإِنَّ اللَّهَ كَانَ عَفُوًّا قَدِيرًا ﴿١٤٩﴾

நிச்சயமாக அல்லாஹ் பிழை பொறுப்பவனாகவும் பேராற்றல் உடையவனாகவும் இருக்கின்றான்.

وَاتَّبِعْ مَا يُوحَىٰ إِلَيْكَ وَاصْبِرْ حَتَّىٰ
يَحْكُمَ اللَّهُ وَهُوَ خَيْرُ الْحَاكِمِينَ ﴿١٠٩﴾

உமக்கு வஹியாக அறிவிக்கப்படுவதைப் பின்பற்றுவீராக!
இன்னும் அல்லாஹ் தீர்ப்பளிக்கும் வரை பொறுமையாக இருப்பீராக!
அவனே தீர்ப்பளிப்போரில் மிகச் சிறந்தவனாவான்.

திருக்குர்ஆன் 4: 149, 10 : 109

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

| | | |
|---|---|---|
| 86 | அல்க(غ)னிய்யு<br>யாதொரு தேவையுமற்றவன் | اَلْغَنِيُّ |
| 87 | அல்கபீ(ف)ல்<br>பொறுப்பாளன் | اَلْكَفِيلُ |

وَرَبُّكَ الْغَنِيُّ ذُو الرَّحْمَةِ ﴿١٣٣﴾

கருணையுடையவனும் யாதொரு தேவையற்றவனுமான உமது இரட்சகன்

وَقَدْ جَعَلْتُمُ اللَّهَ عَلَيْكُمْ كَفِيلًا ﴿٩١﴾

நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்வையே உங்கள் சத்தியங்களுக்குப் பொறுப்பாளனாக ஏற்படுத்தியிருக்கின்றீர்கள்.

திருக்குர்ஆன் 6 : 133, 16 : 91

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

## 88 அல்ஹயிய்யு — اَلْحَيِيُّ

வெட்கப்படுபவன்

## 89 அஸ்ஸித்தீர் — اَلسِّتِّيرُ

மறைப்பதை விரும்புபவன்

وَاللّٰهُ لَا يَسْتَحْيٖ مِنَ الْحَقِّ

அல்லாஹ் சத்தியத்தைக் கூற வெட்கப்படமாட்டான்.

وعن يعلى بن أمية قال: قال رسول الله صلى الله عليه وسلم:

إِنَّ اللّٰهَ عَزَّ وَجَلَّ حَيِيٌّ سِتِّيرٌ يُحِبُّ الْحَيَاءَ وَالسَّتْرَ

நபி(ﷺ) அவர்கள் கூறியதாக யஃலா இப்னு உமையா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் வெட்கப்படுபவனாகவும் மறைப்பதை விரும்புபவனாகவும் இருக்கின்றான்.

திருக்குர்ஆன் 33: 53, அபூதாவுத்: 4012,அஹ்மத்: 4/224, அந்நஸாயி: 406

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

| | | |
|---|---|---|
| 90 | **அல்முஸக்கிர்**<br>விலையைத் தீர்மானிப்பவன் | اَلْمُسَعِّرُ |
| 91 | **அல்காபிழ்**<br>பற்றிப்பிடிப்பவன் | اَلْقَابِضُ |
| 92 | **அல்பாஸித்**<br>விசாலப்படுத்துபவன் | اَلْبَاسِطُ |
| 93 | **அர்ராஸி(Z)க்**<br>உணவளிப்பவன் | الرَّازِقُ |

" إِنَّ اللَّهَ هُوَ الْمُسَعِّرُ الْقَابِضُ الْبَاسِطُ الرَّازِقُ وَإِنِّي لأَرْجُو أَنْ

أَلْقَى اللَّهَ وَلَيْسَ أَحَدٌ مِنْكُمْ يُطَالِبُنِي بِمَظْلَمَةٍ فِي دَمٍ وَلاَ مَالٍ "

மக்களில் ஒரு கூட்டத்தினர் நபியவர்களிடத்தில் சமூகம் தந்து அல்லாஹ்வின் தூதரே! பொருட்களின் விலை உயர்ந்துள்ளது, அவற்றிக்கான விலையை எங்களுக்கு நிர்ணயித்துத் தாருங்கள் என வினவினார்கள். அதற்கு நபியவர்கள் நிச்சயமாக அல்லாஹ்வே விலை நிர்ணயம் செய்யக்கூடியவனாகவும் பற்றிப்பிடிக்கக் கூடியவனாகவும் ( சுருக்குபவனாகவும் ) விசாலப்படுத்தக்கூடியவனாகவும் உணவளிப்பவனாகவும் இருக்கின்றான். மேலும், எவரும் இரத்தம் மற்றும் செல்வம் ஆகியவற்றில் தனக்கு ஏற்பட்ட அநியாயம் தொடர்பாக என்னிடத்தில் முறைப்பாடு செய்யாத நிலையில் அல்லாஹ்வைச் சந்திக்க நான் உறுதியாக ஆசைவைக்கின்றேன் என்றார்கள்.

**அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள், அபூதாவுத் 3450**

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

| | | |
|---|---|---|
| الْمُقَدِّمُ | அல்முகத்திமு<br>முற்படுத்துபவன் | 94 |
| الْمُؤَخِّرُ | அல்முஅஹ்ஹிரு<br>பிற்படுத்துபவன் | 95 |
| الْقَدِيرُ | அல்கதீரு<br>ஆற்றல் படைத்தவன் | 96 |

عن أبي موسى ، عن النبي صلى الله عليه وسلم قال :

أَنْتَ الْمُقَدِّمُ ، وَأَنْتَ الْمُؤَخِّرُ ، وَأَنْتَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

அபூ முஸா (ரலி) அவர்கள் நபி(ﷺ) அவர்களைத் தொட்டும் அறிவிக்கின்றார்கள்: '..நீயே முற்படுத்துபவன், நீயே பிற்படுத்துபவன், நீயே அனைத்துப் பொருட்கள் மீதும் ஆற்றல் படைத்தவன்' என்று பிரார்த்தித்தார்கள்.

புகாரி: 6398, முஸ்லிம் 2719

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## 97 السُّبُّوحُ
**அஸ்ஸுப்பூஹ்**
**மிக்க தூய்மையானவன்**

## 98 الرَّفِيقُ
**அர்ரபீ(ஃ)க்**
**மென்மையானவன்**

عن عائشة رضي الله عنها، أن رسول الله صلى الله عليه وسلم:
كَانَ يَقُولُ فِي رُكُوعِهِ وَسُجُودِهِ سُبُّوحٌ قُدُّوسٌ رَبُّ الْمَلاَئِكَةِ وَالرُّوحِ

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் தமது ருகூவிலும் ஸஜ்தாவிலும் சுப்பூஹுன் குத்தூசுன், ரப்புல் மலாயிகத்தி வர்ரூஹ் (இறைவா! நீ மிக்க தூய்மையானவன். வானவர்கள் மற்றும் ரூஹின் அதிபதி) என்று கூறுவார்கள்.

أن رسول الله صلى الله عليه وسلم قال: "يَا عَائِشَةُ إِنَّ اللَّهَ رَفِيقٌ يُحِبُّ الرِّفْقَ وَيُعْطِي عَلَى الرِّفْقِ مَا لاَ يُعْطِي عَلَى الْعُنْفِ وَمَا لاَ يُعْطِي عَلَى مَا سِوَاهُ"

நபி(ﷺ) அவர்கள் கூறினார்கள்: ‘ஆயிஷா! அல்லாஹ் மென்மையானவன். மென்மையான போக்கையே அவன் விரும்புகிறான். வன்மைக்கும் பிறவற்றுக்கும் வழங்காததை எல்லாம் அவன் மென்மைக்கு வழங்குகிறான்‘.

**அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 840, 5055**

جمعية الـدعوة والإرشـاد وتوعية الجاليات بالخبـر

# அல்லாஹ்வின் அழகிய திருப்பெயர்களைப் பொருள் உணர்ந்து மனனமிடுவோம்.

99

## الطَّيِّبُ அத்தய்யிபு
## தூய்மையானவன்

عن أبي هريرة رضي الله عنه قال :
قال رسول الله صلى الله عليه وسلم :
أَيُّهَا النَّاسُ إِنَّ اللَّهَ طَيِّبٌ لاَ يَقْبَلُ إِلاَّ طَيِّبًا

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:
அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் 'மக்களே!
அல்லாஹ் தூய்மையானவன். தூய்மையானதைத்
தவிர அவன் ஏற்றுக்கொள்ள மாட்டான்'

முஸ்லிம்: 1015